TAMIL NADU LEGISLATURE LIBRARY
17 NOV 1971
MADRAS

தமிழ்நாடு சட்டப்பேரவை

திங்கட்கிழமை, 1971 மார்ச் 29.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அறிவிப்புகள்.

(அ) வினா—விடை நேரம் இல்லாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பதற்கான வினாக்கள் இல்லை. அடுத்து, அரசினர் மசோதாக்கள்.

2. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழக மசோதா.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழக மசோதாவை இந்த மன்றத்தில் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் இம்மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) மசோதா.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) மசோதாவை இந்த மன்றத்தில் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் இம்மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.